**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திரு. A. தமிழ்செல்வன், எம்.எல்.,**

**முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி, விழுப்புரம்**

**2024ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 29ம் நாள் செவ்வாய்கிழமை**

**IA.1/2024**

**in**

**OS.76/2023**

**(CNR.NO.TNVP02-000255-2023)**

கோவிந்தன் .... மனுதாரர்/வாதி

/எதிர்/

கார்த்திகேயன் ....எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு 06.06.2024, 24.06.2024 ஆகிய தேதிகளில் தாக்கல் செய்யப்பட்டு 05.07.2024 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 24.10.2024 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.சி.கே.தேவிங்குராஜா அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ராஜ்நந்தகுமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/வாதியால் இம்மனு சி.பி.சி. கட்டளை 26 விதி 10-A மற்றும் உ/இ. பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அதில் தாவா புரோநோட்டில் கண்ட கையெழுத்துக்களுடன் மனுதாரர்/பிரதிவாதி மனுவுடன் தாக்கல்

செய்யும் கையெழுத்துக்களுடன் மனுவுடன் தாக்கல் செய்யும் மனுவில் குறிப்பிட்டுள்ள கையெழுத்து நிபுணர் ஒப்பிட்டு பார்த்து ஆய்வு செய்து அவரிடமிருந்து ஆய்வறிக்கை பெற்று வரவேண்டி இதில் வழக்கறிஞர் ஆணையர் ஒருவரை நியமனம் செய்திட பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது.

**2. மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனுதாரர் தரப்பில் தான் இம்மனுவில் மனுதாரர் என்றும் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும் மேற்படி இம்மனுவின் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும் மேற்படி எதிர்மனுதாரர்/வாதி தன் பேரில் பொய்யும், மோசமுமான அம்சங்களுடன் பிராம்சரி நோட்டின் பேரில் மேற்படி நெம்பரில் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி வழக்குரை அம்சங்கள் முழுவதையும் தான் திட்டவட்டமாக மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளதாகவும் உண்மை யாதெனில் தான், வாதியிடம், மகளின் திருமண செலவிற்காக ரூ.1,00,000/- கடன் பெறவில்லை என்றும் தான் ஏற்கனவே ரூ.40,000/- தான் வியாபார செலவிற்காக கைமாற்றுக் கடனாக 2021-ஆம் வருடம் ஜூலை மாதம் ரூ.40,000/- மட்டுமே கடனாக பெற்றதாகவும் மேற்படி கடனுக்காக தான், வாதியிடம், தானும், தனது மனைவி திருமதி.விமலா ஆகிய இருவரும் முழுவதும் பூர்த்தி செய்யப்படாமல் ஒரு பிராம்சரி நோட்டில் வாதியே தொகை ரூ.40,000/- என்று எழுதினார் என்றும் மேலும் பிராம்சரி நோட்டில் தேதியும் குறிப்பிட்டு மேற்படி பிராம்சரி நோட்டில் ஒரு கையெழுத்து மட்டும் பெற்றுக்கொண்டார் என்றும் மேற்படி ரூ.40,000/- தொகைக்கு ரூ.6% பைசா வட்டி ரூ.2,400/- வீதம் கொடுக்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தார் என்றும் ஆனால் தான் தொடர்ந்து வட்டி கொடுத்து வந்து அசல் மற்றும் வட்டி பாக்கியை

வாதியிடம் கொடுத்து பைசல் செய்துவிட்டதாகவும் ஆனால் பைசல் செய்யப்பட்ட பிராம்சரிநோட்டை தனது வசம் திருப்பி கொடுக்காமல், கந்து வட்டி அடிப்படையில் அதிகமான வட்டி கேட்டு தொல்லை கொடுத்து வந்தார் என்றும் தொடர்ச்சியாக வாதி, 01.11.2021 அன்று தனது வீட்டுக்கு வந்து, தான் வீட்டில் இல்லாத நேரத்தில் தனது குமாரர் ராஜேஷ் என்பவரை மிரட்டிவிட்டு, வீட்டில் இருந்த இருசக்கர வண்டியை தூக்கி சென்றுவிட்டதாகவும் மேற்படி வண்டியை 60 நாட்கள் வாதியின் வசம் வண்டியை வைத்திருந்தார் என்பதால் பைனான்ஸ் கம்பெனி வண்டியை கைப்பற்றிக்கொண்டார்கள் என்றும் மேற்படி தான் 14.01.2022 அன்று மாலை 6.05 மணிக்கு கோவிலுக்கு சென்று கொண்டிருந்தபோது ரோட்டில் வழியில் தன்னையும், தனது குடும்பத்தினர்களை வழி மறித்து, பிரச்சனை செய்தார் என்றும் மேலம் அதன் தொடர்ச்சியாக 21.03.2022-ஆம் தேதி மாலை 5.30 மணியளவில் தான் இரு சக்கர வாகனத்தில் விக்கிரவாண்டி செல்ல பொய்யப்பாக்கம் கிராமத்தில் இருந்து மாதிரிமங்கலம் வழியாக சென்று கொண்டிருந்தபோது வதி, இரு சக்கர வாகனத்தில் வேகமாக தன்னை விரட்டிக்கொண்டு தன்னை பார்த்து டேய் தெவிடியா பையா நில்லுடா என்று மொவனே உன்னை இங்கேயே வெட்டி கொள்ளுரண்டா என்று மிரட்டினார் என்றும் தான் அச்சமயம் தனியாக சென்றதால் உயிருக்கு பயந்து வேகமாக வண்டியை ஓட்டிக்கொண்டு மாதிரிமங்கலம் கிராமத்தில் தருமலிங்கம் என்பவரின் வீட்டின் அருகில் இரு சக்கர வண்டியை நிறுத்தியபோது, பின்னோக்கி வேகமாக விரட்டிக்கொண்டு வந்த வாதி வண்டியை விட்டு இறங்கி வந்து அருகில் கிடந்த விறகு கட்டையை எடுத்து தனது இடது பக்க கழுத்து, மார்பு மற்றும் தலையில் பலமாக தாக்கியதில் வலி தாங்க முடியாமல் கத்தியபோது அருகில் இருந்த தருமலிங்கம் மனைவி நீலா, குப்புசாமி மனைவி உத்திராணி ஆகியோர்கள் சம்பவத்தை பார்த்து

கத்தியபோது ஊர் மக்கள் ஓடிவந்தபோது வாதி அவருடைய இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு வேகமாக தப்பித்து ஓடிவிட்டார் என்றும் வாதியால் தாக்கப்பட்ட தான் மயங்கி கீழே விழுந்து விட்டதாகவும், அருகில் இருந்து நீலா என்பவரின் கணவர் தருமலிங்கம் அவர்கள் 108 ஆம்புலன்ஸ்க்கும், தனது மகனுக்கும் தகவல் சொல்லி 108 ஆம்புலன்ஸ் வந்தவுடன் தனது மகன் ராஜேஷ் தன்னை 108 ஆம்புலன்சில் ஏற்றி முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார் என்றும் தனக்கு ஏற்பட்ட பலத்த அடியால் மார்பு பகுதியில் இரத்தம் கட்டிக்கொண்டும் கழுத்து, கை, தலைப்பகுதியில் தாக்கப்பட்ட காரணத்தால் வலி தாங்கி கொள்ள முடியாமல் துடித்து வந்ததாகவும் மேற்படி வாதி , தன்னை கொடூரமாகவும், கொலை வெறியுடன், தாக்கிய சம்பவம் குறித்து தனது மனைவி விமலா அவர்கள் வாதியின் மீது உரிய நடவடிக்கை எடுக்க கோரி விழுப்புரம் தாலுக்கா காவல் நிலையத்தில் கடந்த 22.03.2022 அன்று புகார் கொடுத்தார் என்றும் மேற்படி புகாரை பெற்றுக்கொண்ட காவல் நிலையம் புகார் மனு எண்.466/ 2022 பதிவு செய்து, புகார் மனு ரசீது (CSR) வழங்கியுள்ளது என்றும் மேற்படி புகாரின் பேரில் வாதியின் மீது நடவடிக்கை எடுக்கவிடாமல் ஆள்பலம் மற்றும் அதிகார பலத்தால் தடுத்துவிட்டார் என்றும் தான் மூன்று நாட்கள் மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு வீட்டில் ஓய்வு எடுத்துக்கொண்டு இருந்தபோது தனது குடும்பத்தினர்களுக்கு, வாதி மீண்டம் கொலை மிரட்டல் கொடுத்தார் என்றும் மீண்டும் தனது மனைவி விமலா அவர்கள் விழுப்புரம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களிடம் 28.03.2022 அன்று புகார் மனு கொடுத்தார் என்றும் மேற்படி புகாரை பெற்றுக்கொண்ட மாவட்ட காவல் அலுவலகம் C.No.G3/6245/SP/

VPM/VISITORS/2022 மனு ரசீது வழங்கப்பட்டுள்ளது என்றும் வாதியால், தான் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் வாதி, தன்னை பார்த்து ஊரில் தலைகாட்டினால் கொலை செய்து விடுவதாக மிரட்டி வந்தார் என்றும் தனது மனைவி வாதியின் மீது கொடுத்தபுகார் மற்றும் ரசீதுகள் அசல் வழக்கில் எதிருரையுடன் தாக்கல் செய்துள்ளதாகவும் தற்போது எதிர்மனுதாரர்/வாதி, புதியதாக ஒரு பிராம்சரி நோட்டை குடும்ப உறுப்பினர்களை வைத்தே தயார் செய்து, அதில் தனது கையெழுத்தை ஆள்மாறாட்டம் செய்து போட வைத்து அதில் தான் எதிர்மனுதாரர்/ வாதியிடம் ரூ.1,00,000/- கடன் வாங்கியது போல ஜோடிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி தாவா பிராம்சரி நோட்டில் உள்ள கையெழுத்து தன்னுடைய கையெழுத்து இல்லை என்றும் எதிர்மனுதாரர்/வாதி குடும்ப உறுப்பினர்களை மட்டும் வைத்து ஆள்மாறாட்டம் செய்து தாவா பிராம்சரி நோட்டை உருவாக்கி அறிவிப்பு 28.01.2023 அன்று அனுப்பினார் என்றும் மேற்படி அறிவிப்பை பெற்ற தான், 09.02.2023ஆம் தேதியில் பதில் அறிவிப்பை அனுப்பியுள்ளதாகவும் மேற்படி பதில் அறிவிப்பை வாதியின் வழக்கறிஞர் 11.02.2023ஆம் தேதியில் பெற்றுக்கொண்டார் என்றும் வாதி அனுப்பிய அறிவிப்பு, மற்றும் பிரதிவாதி, வாதியின் வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பு மற்றும் பதில் அறிவிப்பை வாதியின் வழக்கறிஞர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை ஆகியவற்றை தான் ஏற்கனவே எதிருரையுடன் தாக்கல் செய்துள்ளதாகவும் எதிர்மனுதாரர்/வாதி தாக்கல் செய்துள்ள அசல் வழக்கில் தான் ஆஜராகி கடந்த 09.03.2023ஆம் தேதியில் சமூகம் நீதிமன்றத்தில் உள்ள வழக்கு கோப்புடன் தாக்கல் செய்யப்பட்ட தாவா பிராம்சரி நோட்டை பார்வையிட அனுமதி பெற்று சமூகம் நீதிமன்ற அலுவலர் முன்னிலையில் பார்வையிட்ட போது தாவா

பிராம்சரி நோட்டில் உள்ள கையெழுத்து தன்னுடைய கையெழுத்து இல்லை என்றும் மேற்படி தனது கையெழுத்தை எதிர்மனுதாரர்/வாதி நெருங்கிய குடும்ப உறவினர்களை கொண்டு மோசடியாக தயார் செய்து தாவா பிராம்சரி நோட்டின் பேரில் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் தெரியவந்தது என்றும் மேற்படி தாவா பிராம்சரி நோட்டு மோசடியானது என்பதால் அதில் உள்ள கையெழுத்தை (Expert Opinion) கையெழுத்து வல்லுனர் ஆய்வுக்கு அனுப்பி அதன் அறிக்கை பெற்றால் மேற்படி தாவா பிராம்சரி நோட்டில் உள்ள கையெழுத்து தனது கையெழுத்து இல்லை என்பது தெள்ளத்தெளிவாக நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்பதை தான் தாக்கல் செய்துள்ள எதிருரையில் குறிப்பிட்டுள்ளதாகவும் மேற்படி எதிர்மனுதாரர்/வாதி, தாவாவில் உண்மைகளை மறைத்துவிட்டு, தன்னிடம் அதிகமான பணம் அபகரிக்கும் கெட்ட எண்ணத்தில் தாவா பிராம்சரி நோட்டை எதிர்மனுதாரர்/வாதிக்கு சாதகமான குடும்ப உறவுகளை கொண்டு பூர்த்தி செய்து தன் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளது மோசடியான செயலாகும் என்றும் மேற்படி மோசடியான செயலை தான் நிரூபணம் செய்ய வேண்டியது தனது கடமையாக உள்ளது என்றும் தாவா பிராம்சரி நோட்டில் உள்ள கையெழுத்துக்கள் தன்னுடையது அல்ல என்றும் அது போர்ஜரியாக தயார் செய்யப்பட்டது என்பதை சமூகம் கோர்ட்டார் அவர்களுக்கு நிரூபணம் செய்திட வேண்டியது அவசியமாகிறது என்றும் இத்துடன் தான் போட்டுள்ள தன்னுடைய கையெழுத்துக்களுடன் தாவா பிராம்சரி நோட்டில் உள்ள கையெழுத்துக்களுடன் ஒப்பிட்டு பார்த்தால் உண்மை விளங்கும் என்றும் மேலும் வெறும் கண்களால் கையெழுத்தின் உண்மை தன்மையை கண்டறிய இயலாது என்றும் ஒரு தேர்ந்த கையெழுத்து நிபுணரின் ஆய்வு மூலம் மட்டுமே கையெழுத்து உண்மைத்தன்மையை துல்லியமாக

அறிய முடியும் என்றும் இத்துடன் தான் தாக்கல் செய்துள்ள தன்னுடைய கையெழுத்துகளுடன் ஒப்பிட்டு பார்த்து ஆய்வறிக்கை பெற வேண்டி தான் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் இதனால் எதிர்மனுதாரர்/ வாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்படப்போவதில்லை என்றும் மேற்படி அசல் வழக்கில் கடந்த 12.12.2023ஆம் தேதியில் சமூகம் நீதிமன்றத்தில் வாதியை, தனது வழக்கறிஞர் வா.த.சா.1ஐ குறுக்கு விசாரணை செய்த போது மேற்படி எதிர்மனுதாரர்/வாதி மேற்படி தாவா பிராம்சரி நோட்டை கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி ஆய்வறிக்கை பெற எவ்வித ஆட்சேபணை இல்லை என்று சொல்லியுள்ளார் என்றும் எனவே தாவா பிராம்சரி நோட்டிலுள்ள கையெழுத்துக்களையும், இத்துடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்களையும் கையெழுத்து நிபுணருக்கு அனுப்பி ஆய்வறிக்கை பெற்றுவர ஏற்படும் கட்டணத்தை செலுத்த தான் தயாராக உள்ளதாகவும் எனவே சமூகம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து தாவா பிராம்சரி நோட்டில் உள்ள கையெழுத்துக்களுடன், தான் இத்துடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் கண்டுள்ள கையெழுத்துக்களுடன் இத்துடன் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ள கையெழுத்து நிபுணர் ஒப்பிட்டு பார்த்து ஆய்வு செய்து அவரிடமிருந்து ஆய்வறிக்கை பெற்று வர வேண்டி இதில் வழக்கறிஞர் ஆணையர் ஒருவரை நியமனம் செய்திட வேண்டியது அவசியமும், நியாயமுயாய் இருக்கிறது என்றும் மனு மற்றும் அபிடவிட்டில் கூறப்பட்டுள்ளது.

**3. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம் பின்வருமாறு:-**

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு தப்பும் பொய்யுமானது என்றும் உண்மைக்கும் நியாயத்திற்கும் விரோதமானது என்றும் இந்த

எதிர்மனுதாரரைப் பொருத்தமட்டில் மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்திட வேண்டியது அவசியமானதும் நியாயமானதும் ஆகும் என்றும் இந்த எதிர்மனுதாரர் இங்கு வெளிப்படையாக ஒப்புக்கொண்ட அம்சங்களைத் தவிர மனுவில் கண்ட ஏனைய இதர அம்சங்கள் அனைத்தையும் குறிப்பாக மறுக்கிறார் அவற்றை மனுதாரரே உரிய ஆதரவுகளுடன் நிரூபிக்க கடமைப்பட்டவர் என்றும் தாவா பிராம்சரி நோட்டில் உள்ள பிரதிவாதியின் கையொப்பத்தினை கையொப்பம் நிபுணருக்கு கூராய்வு செய்து கருத்துரு அறிக்கை அளித்திட கோரி அனுப்பிட வேண்டி மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் ஆனால் இந்த மனுவில் மனுதாரர் அவர் தற்போது தனித்தாளில் சமீபத்தில் இட்டுள்ள 10 சமீபத்திய கையொப்பங்களுடனும் 25.06.2021 தேதியிட்ட விழுப்புரம் 1நீ இணை சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகலில் உள்ள மனுதாரரின்/பிரதிவாதியின் கையொப்பத்தினையும் தாவா பிராம்சரி நோட்டில் வாதி மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரதிவாதி கையொப்பம் இட்டதாக வாதி கூறி பிரதிவாதி மறுக்கும் கையொப்பத்தினை ஒப்பீடு செய்திட கோருவது முற்றிலும் சட்டத்திற்கும், நீதிக்கும் புறம்பானது சமகாலத்திய மற்றும் அசல் கையொப்பங்களை மட்டுமே ஒப்பீடு செய்திட மனுதாரர்/பிரதிவாதி கோர முடியும் என்றும் எனவே மனு எடுத்த எடுப்பிலேயே செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்திட லாயக்கானது என்றும் இந்த வழக்கிற்காக சமீப காலமாக மனுதாரர்/பிரதிவாதி தனது கையொப்பத்தினை வேண்டுமென்றே திட்டமிட்டு வேறு விதமாக மாற்றி கையொப்பம் இடும் பழக்கத்தினைக் கொண்டு தனது வழக்கமான கையொப்பத்தினை மாற்றி கையொப்பம் இட்டு வருகிறார் என்றும் மேலும் தாவாவில் பிரதிவாதி கையொப்பத்தினை தனது எதிருரையிலேயே மறுத்துள்ள நிலையில், விசாரணை துவங்குவதற்கு முன்பே மனுதாரர்/பிரதிவாதி இத்தகைய மனுவை

தாக்கல் செய்திருக்க நல்ல வாய்ப்புகள் இருந்தும் அவர் அவ்வாறு தாக்கல் செய்திடாமல் வேண்டுமென்றே வெகுகாலம் கடத்தியும், வாதி தரப்பு சாட்சியங்கள் முடிந்தும் பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக இருக்கும் போதும் இத்தகைய மனு தாக்கல் செய்து, பிரதிவாதி தரப்பு சாட்சியங்களை சமூகம் நீதிமன்றத்தில் அளிப்பதில் இருந்து காலம் கடத்தி தவிர்த்து வருகிறார் என்றும் எனவே இந்த மனு நல்ல என்னத்துடன் தாக்கல் செய்யப்பட்டதல்ல என்றும் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்திட லாயக்கானது என்றும் தாவா பிராம்சரி நோட்டு சமகாலத்தில் மனுதாரர்/ பிரதிவாதி கையொப்பம் செய்துள்ள ஏற்கத்தக்க அசல் ஆவணங்களில் உள்ள கையொப்பங்களுடன் தாவா பிராம்சரி நோட்டில் உள்ள பிரதிவாதியின் கையொப்பத்தை ஒப்பீடு செய்வதில் இந்த எதிர்மனுதாரர்/வாதிக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றும் அதே சமயத்தில், அவ்வாறு இன்றி வழக்கு தாக்கல் செய்த பின்னர் சமீபத்திய கையொப்பங்களுடனும் அசல் இல்லாமல் நகல்களில் உள்ள பிரதிவாதியின் கையொப்பங்களுடனும் ஒப்பீடு செய்வது வழக்கு விசாரணைக்கு எந்த பலனையும் அளிக்காது என்றும் மேலும் அது இந்த எதிர்மனுதாரர்/வாதிக்கு மிகுந்த கஷ்டத்தையும் நஷ்டத்தையும் ஏற்படித்தும், சொல்லவொனா துண்பமும் துயரமும் ஏற்படுமே ஒழிய மனுதாரருக்கோ அல்லது வழக்கு விசாரணைக்கோ எந்த பலனும் ஏற்படப்போவது இல்லை என்றும், மேலும் இந்த மனுவை தள்ளுபடி செய்வதாலும் மனுதாரருக்கு சட்டப்படி எந்த அநீதியும் ஏற்படப்போவதில்லை என்றும் மேற்கண்ட சூழ்நிலைகளில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள இந்த மனுவை தள்ளுபடி செய்தும், இந்த எதிர்மனுதாரருக்கு இந்த மனுவினால் ஏற்பட்டுள்ள செலவினை மனுதாரர் வழங்கிடவும் உத்திரவு செய்திட வேண்டும் என்றும் ஆட்சேபணையில் கூறப்பட்டுள்ளது.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் விசாரித்து குறியிடப்படவில்லை. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

## 5. தீர்வுக்கான பிரச்சினை :-

மனுதாரர் மனுவில் கோரிய பரிகாரம் வழங்கி மனு அனுமதிக்கத்தக்கதா அல்லது இல்லையா என்பதே இம்மனுவில் தீர்வு காண வேண்டிய பிரச்சனையாகும்?

## 6. தீர்வு :-

மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும் எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும் வாதி எதிர்மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக பிரதிவாதி பிராமிசரி நோட்டில் கையெழுத்திட்டு கடன் வாங்கியதாக கடனை வசூல் செய்ய அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் மனுதாரர்/ பிரதிவதி 14.06.2021 தேதியில் வாதி சொல்வது போல் தாவா பிராமிசரி நோட் எழுதிக்கொடுக்கவில்லை என்று குறிப்பாக எதிருரையில் மறுத்துள்ளார் என்றும் ஆகவே, தாவா பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்து மனுதாரர்/ பிரதிவாதியுடையது அல்ல என்பதை நிரூபிக்கும் விதமாக தாவா அசல் பிராமிசரி நோட்டை மனுதாரரின் ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்தான 25.06.2021 தேதியில் 1வது இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்துள்ள ஆவணத்தில் உள்ள கையெழுத்துடன் ஒப்பிட்டு அறிக்கை

பெற வேண்டி கட்டளை 26 விதி 10-A கீழ் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

7. எதிர்மனதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தம்முடைய வாதத்தில் மனுதாரர்/பிரதிவாதி கட்டளை 26 விதி 10-An கீழ் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் தனித்தாளில் சமீபத்தில் இட்டுள்ள 10 கையெழுத்துக்கள், 25.06.2021 தேதியிட்ட விழுப்புரம் 1 நீ இணை சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகலில் உள்ள மனுதாரர்/பிரதிவாதி கையெழுப்பத்தினை தாவா பிராமிசரி நோட்டில் உள்ள பிரதிவாதியின் கையொப்பத்துடன் ஒப்பீடு செய்து கருத்துரை கோருவது முற்றிலும் சட்டத்திற்கு புறம்பானது என்றும் மனுதாரர்/பிரதிவாதி வேண்டுமென்றே தற்போது வேறுவிதமாக மாற்றி கையெழுத்திடும் வழக்கத்தினை கொண்டு மாற்றி கையொப்பமிட்டு வருகிறார் என்றும் பிரதிவாதி கையொப்பத்தினை அவரது எதிருரையிலேயே மறுத்துள்ள நிலையில் விசாரணை துவங்குவதற்கு முன்பே மனுதாரர்/பிரதிவாதி இந்த மனுவை தாக்கல் செய்ய வாய்ப்புகள் இருந்தும் அவ்வாறு தாக்கல் செய்யாமல் காலம் கடத்தி வாதி தரப்பு சாட்சிகள் முடித்த பிறகு பிரதிவாதி தரப்பு விசாரணைக்காக இருக்கும் நிலையில் தாக்கல் செய்துள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்றும் அதனால் தள்ளுபடி செய்யத்தக்கது என்றும் தாவா பிராமிசரி நோட் சமகாலத்தில் மனுதாரர்/பிரதிவாதி கையொப்பங்களுடன் தாவா பிராமிசரி நோட்டில் உள்ள பிரதிவாதியின் கையொப்பத்தை ஒப்பீடு செய்வதில் இந்த எதிர்மனுதாரர்/வாதிக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றும் வாதிட்டார்.

8. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது. எதிர்மனுதாரர்/வாதி பிரதிவாதி/மனுதாரர் 14.06.2021 தேதியில் தாவா பிராமிசரி நோட்டினை ரூ.1,00,000/-க்கு எழுதிக்கொடுத்து வட்டியுடன் திருப்பி செலுத்துவதாக ரூ.1,00,000/-ஐ அன்றையதினமே கடனாக பெற்று திரும்ப செலுத்தவில்லை என்றும் அதனால் வட்டியுடம் ரூ.1,19,766/- பணம் வசூல் செய்ய வேண்டி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி தரப்பில் வா.சா.1 முதல் வா.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வாதி தரப்பு சாட்சி முடிக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்காக வைக்கப்பட்ட நிலையில் பிரதிவாதி கட்டளை 26 விதி 10-Aன் கீழ் தாக்கல் செய்துள்ளார். இந்த மனுவுடன் பிரதிவாதி தற்போது பிரதிவாதியின் கையெழுத்து என்று 10 கையெழுத்துக்களிட்ட தனி தாள் 25.06.2021 தேதியில் Varashakthi Housing Finance நிறுவனத்தில் கடன் பெற்றபோது ஏற்படுத்திக்கொடுத்த பதிவு செய்யப்பட்ட அடைமான கடன் பத்திரத்தின் நகலை தாக்கல் செய்து அவைகளை அசல் தாவா பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்துடன் ஒப்பீடு செய்ய வேண்டும் என்று கோரியிருந்தார். பிறகு குறிப்பாணை மூலம் 21.10.2024 அன்று மேற்படி 25.06.2021 தேதியிட்ட 1 நீ இணை சார்பதிவாளர் அலுவலகம் ஆவண எண். 1675/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் அசலை தாக்கல் செய்துள்ளார்.

9. வழக்கு ஆவணங்களில் இருந்து தாவா பிராமிசரி நோட்டின் பெயரில் பணம் வசூல் செய்ய வாதி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் பிரதிவாதி/மனுதாரர் அவரது எதிர்வழக்குரையிலேயே தாவா பிராமிசரி நோட்டில் உள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என்று ஆட்சேபணை செய்துள்ளார். இருப்பினும் அந்த சமயத்திலேயே ஒப்பீட்டுக்கு மனு தாக்கல்

செய்யாமல் பிரதிவாதி தரப்பு சாட்சியத்திற்கு வைக்கப்பட்ட நிலையில் இந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது சரியா என்று ஆராய்கையில் மாற்றுமுறை ஆவணச் சட்டம் பிரிவு 118ன் கீழ் வாதிக்கு ஆதரவாக அனுமானம் எழ வாதிதான் பிராமிசரி நோட் முறையாக நிறைவேற்றப்பட்டது என்ற தொடக்க நிலை சுமை உள்ளது. அவ்வாறு தொடக்க நிலை சுமை வாதியால் ஏற்படுத்தப்பட்ட பிறகு அதனை மறுத்தலிக்கும் பொறுப்பு பிரதிவாதியை சார்ந்தது என்பது சட்டத்தால் தீர்மானிக்கப்பட்ட நிலை. இந்த வழக்கில் தாவா பிராமிசரி நோட் பிரதிவாதியால் ஏற்படுத்தப்பட்டது என்ற தொடக்க நிலை சுமையை நிறைவேற்றும் பொருட்டு வாதி தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். ஆகவே, அதனை மறுத்தலிக்கும் நிலை பிரதிவாதிக்கு தற்போது தான் ஏற்பட்டுள்ளது. ஆகவே, இந்த தருணத்தில் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு சட்டப்படி ஏற்கத்தக்கதே என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

10. மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் காந்தி எதிர் ராஜசேகர் (சி. ஆர்.பி. (எம்.டி) 2163/2022 தீர்வு செய்யப்பட்ட நாள் 21.12.2022) என்ற வழக்கில் பிரதிவாதி அவரது தரப்பு சாட்சியத்தின் போது சான்றிடப்பட்ட ஆவணத்தை தாக்கல் செய்து அதன் பிறகு அசல் ஆவணம் தாக்கல் செய்யப்பட்டு அதனை ஒப்பிட்டு காட்ட விசாரணை நீதமன்றம் அனுப்பியது சரியே என்று தீர்வு கண்டுள்ளது. மேற்கண்ட தீர்ப்பு முடிவினை பின்பற்றி இந்த வழக்கிலும் பிரதிவாதி அவருக்கு எதிராக ஏற்பட்டுள்ள அனுமானத்தை மறுத்தலிக்கும் விதமாக தாவா பிராமிசரி நோட்டில் உள்ள பிரச்சனைக்குறிய கையெழுத்தை பிரதிவாதி தாவா பிராமிசரி நோட் ஏற்பட்ட அதே காலகட்டத்தில் ஏற்படுத்திய பதிவு ஆவணமான 1 நீ சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1675/2021 ஒப்பீடு செய்து அறிக்கை பெற

கட்டளை 26 விதி 10A-ன் கீழ் தாக்கல் செய்துள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதே என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

**முடிவாக,** இந்த மனு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

1) வழக்கறிஞர் திரு.S.முகமது யாசர் அராபத் (M.S.No.6501/2021) என்பவர் வழக்கறிஞர் ஆணையராக நியமிக்கப்படுகிறார்.

2) வழக்கறிஞர் ஆணையரின் கட்டணம் ரூ.10,000/- ஆக நிர்ணயிக்கப்படுகிறது.

3) மேற்படி வழக்கறிஞர் ஆணையர் கையெழுத்தை ஒப்பிட்டு பார்ப்பதற்கு தாவா புரோநோட்டை சென்னை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு எடுத்து சென்று 25.06.2021 தேதியிட்ட 1 ஙீ இணை சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.1675/2021 ஆக பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் அசலுடன் ஒப்பீடு செய்து தடய அறிவியல் ஆய்வக அறிக்கையை பெற்றுக்கொண்டு இந்நீதிமன்றத்தில் வழக்கறிஞர் அறிக்கையுடன் தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

4) மனுதாரர்/பிரதிவாதி வழக்கறிஞர் ஆணையரின் ஊதியம் ரூ.10,000/-ஐ 08.11.2024 தேதிக்குள் நேரடியாக வழக்கறிஞர் ஆணையரிடம் செலுத்தி நீதிமன்றத்தில் தெரிவிக்க உத்தரவிடப்படுகிறது.

5) வழக்கறிஞர் ஆணையர் அறிக்கை மற்றும் தடய அறிவியல் ஆய்வக அறிக்கை தாக்கல் செய்ய அழைக்க 02.12.2024.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 29.10.2024 இன்று பகரப்பட்டது.

/ஒப்பம்/A.தமிழ்செல்வன்,
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.

**இணைப்பு :-**

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை)

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை.)

/ஒப்பம்/A.தமிழ்செல்வன்,
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.